13876

PRESIDENT SCOUT AWARDS CEREMONY

# ஜனாதிபதி பதக்கம் சூட்டு விழா

AMIR ALI PUBLIC LIBRARY
04-3-1992

அமீர் அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

முஸ்லிம் மத்திய கல்லூரி
சம்மாந்துறை.

1992.02.29

ACCESSION NO:- 13876
CLASS NO :-

Robert Stephenson Smyth Baden Powell
(1857– 1941)

# The man who started SCOUTING



"இவ்வுலகத்தை நீங்கள் கண்டதிலும் பார்க்க ஓரள/
வாவது நல்ல நிலைமைக்குக் கொணர்ந்து விடுவதற்கு
முயற்சியுங்கள்" - பேடன் பவல் பிரபு -

13876

39
2009.07.09

# LORD BADEN POWEL'S



REFERENCE SECTION

Dear Scouts,

*If you have ever seen the play "Peter Pan" you will remember how the pirate chief was always making his speech because he was afraid that possibly when the time came for him to die he might not have time to get it off his chest. It is much the same with me, and so, although I am not at this moment dying, I shall be doing so one of these days and I want to send you a parting word of good-bye.*

*Remember, it is the last you will ever hear from me, so think it over.*

*I have had a most happy life and want each one of you to have as happy a life too.*

*I believe that God put us in this jolly world to be happy and enjoy life. Happiness doesn't come from being rich, nor merely from being successful in your career, nor by self-indulgence. One step towards happiness is to make yourself healthy and strong while you are a boy, so that you can be useful and so can enjoy life when you are a man.*

*Nature study will show you how full of beautiful and wonderful things God has made the world for you to enjoy. Be contented with what you have got and make the best of it. Look on the bright side of things instead of the gloomy one.*

*But the real way to get happiness is by giving out happiness to other people. Try and leave this world a little better than you found it and when your turn comes to die, you can die happy in feeling that at any rate you have not wasted your time but have done your best. "Be Prepared" in this way, to live happy and to die happy-stick to your Scout Promise always-even after you have ceased to be a boy-and God help you to do it.*

*Your friend,*

Baden - Powell of Gilwell.

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

# மகிழ்வுறும் மத்திய கல்லூரி

– எம்.எல்.ஏ. ஸலாம் –

இன்றைய தினம் இவ்வித்தியாலயத்தின் மகிழ்ச்சிக்குரிய நாளாகும். சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிறந்த இந் நன்னாளில் எமது வித்தியாலய மாணவர் ஒருவர் சாரணியத்தின் அதி உயர்ந்த ஜனாதிபதி பதக்கம் பெற்று கௌரவிக்கப்படுகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

மனித குலத்தின் மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட சாரணிய இயக்கம் இன்று உலகளாவிய ரீதியில் வேரூன்றியுள்ளது. இதனால் மனித சமுதாயம் பெற்ற நன்மைகள் அளப்பெரியன.

எமது கல்லூரியில் சாரணிய இயக்கம் வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் இயங்கிவருகின்றது. என்பதற்கு எமது மாணவர் ஜனாதிபதி பதக்கம் பெற்றதே ஒரு சான்றாகும்.

இம்முயற்சிக்கு அல்லும் பகலும் உறுதுணையாக பாடுபட்டுக்கொண்டிருக்கும் ஆசிரியர் ஜனாப், இ எ நதில் ஆசிரியர் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவது பொருத்தமுடையதாகும்.

எதிர்வரும் காலங்களில் இவ்வியக்கச் செயற்பாடுகள் வெற்றிபெற எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

M Salam

அதிபர்,
முஸ்லிம் மத்திய கல்லூரி,
சம்மாந்துறை.

## பாராட்டும்

கோட்டக் கல்வி அதிகாரி

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

— யூ. எல். அலியார். —

இன்று சாரணர் இயக்கம் பாடசாலைகளின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முக்கிய இடத்தைப் பெற்றுவருகின்றது. இதற்குக் காரணம் சாரணர் இயக்கம் வலியுறுத்துகின்ற சமய விசுவாசம், நாட்டுப் பற்று, பிறருக்கு உதவி புரிதல் என்னும் மேலான கோட்பாடுகளை நடைமுறையில் பின்பற்றுவதற்காக பயிற்சியை அது இளம் சிறார்களிடத்தில் ஊட்டுகின்றது.

இக்கட்டுப்பாட்டையும், பண்பாட்டையும் பயிலுகின்ற மாணவர் சமுதாயம் எதிர்காலத்தில் சுபீட்சமான அமைதியான வாழ்க்கைக்கு வழிகோலும் என்பதில் சந்தேகமில்லை.

சம்மாந்துறை மத்திய மகாவித்தியாலயச் சாரணர் இயக்க நடவடிக்கையில் இந்த வகையில் முன்னோடியாகச் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது. 1991 ம் ஆண்டில் இப்பாடசாலையிலிருந்து மூன்று சாரணர்கள் ஜனாதிபதி பதக்கம் பெறும் பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றார்கள். இவர்களுக்கும், இவர்களை வழி நடாத்தும் சாரண ஆசிரியர்களுக்கும் எனது இதயம் கனிந்த பாராட்டுக்கள்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்
கோட்டக்கல்வி அலுவலகம்,
சம்மாந்துறை.

ALI PUBLIC LIBRARY
SAMMANTHURAI
04-3-1992

## வாழ்த்துச் செய்தி

[illegible]

[illegible]
(பிரதிக் கல்விப் பணிப்பாளரும், மாவட்ட சாரண ஆணையாளரும்)

அக்கரைப்பற்று – கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் சாரணர் இயக்கப் பணியில் கடந்த சில ஆண்டுகளாக அரிய சேவைகளை ஆற்றி வருகிறது. இதன் காரணமாக ஆண்டு தோறும் ஜனாதிபதி பதக்கங்களைப் பெறும் சாரணர்கள் தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறது.

அண்மையில் அக்/ சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியிலிருந்து ஜனாதிபதி பதக்கங்களைப் பெறும் பொருட்டு மூன்று சாரணர்கள் தெரிவு செய்யப்பட்டனர். செல்வன் ஐ எல் ஜலீல், எச் எம் எம் ஹுஸைறான், எம் ரீ எம் நசார் ஆகிய சாரணர்கள் மூவரும் கடந்த ஆண்டு ஜனாதிபதி விருதைப்பெற்று தம் கல்லூரிக்கும் இம் மாவட்டத்திற்கும் நற்பெயரை ஈட்டிக் கொடுத்துள்ளனர். இவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஜனாதிபதி பதக்கம் பெற்ற இவர்களைக் கௌரவிக்கும் வகையில் சம்மாந்துறை மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சின்னம் சூட்டும் வைபவம் சிறப்பாக அமையப் பிரார்த்திப்பதோடு அவ்வைபவத்தையொட்டி வெளியிடும் ஞாபகார்த்த மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சாரணர் இயக்கத்தின் மூலம் சிறந்த உயர்ந்த உத்தமமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு சகலரும் சிரத்தையுடன் பாடுபட வேண்டுமென்றும், இறைவன் அனைவருக்கும் அருள் புரிய வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன்.

பிரதிக் கல்விப் பணிப்பாளரும்,
சாரண மாவட்ட ஆணையாளரும்,
மாவட்டக் கல்விக் காரியாலயம்,
கல்முனை.

## சாரணர் வாக்குறுதி

என்னால் கூடுமானவரையில் எனது சமயத்திற்கும், நாட்டிற்கும் என் கடமையைச் செய்வேன் என்றும், எக்காலத்திலும் பிறருக்கு உதவி செய்வேன் என்றும், சாரண விதிகளுக்கு அமைந்து, பணிந்து நடப்பேன் என்றும் என் கௌரவத்தின்மீது வாக்குறுதியளிக்கின்றேன்.

PUBLIC LIBRARY
04-3-1992
SAMMANTHURAI

### சாரணர் விதிகள்:

01. சாரணன் நம்பத் தகுந்தவன்.
02. சாரணன் பற்றுறுதியுடையவன்.
03. சாரணன் நேசமும், மரியாதையுமுடையவன்.
04. சாரணன் இன்னொரு சாரணருக்குச் சகோதரன்.
05. சாரணன் தைரியமுள்ளவன்.
06. சாரணன் பிராணிகளின் தோழன்.
07. சாரணன் ஒத்துழைப்பவன்.
08. சாரணன் மன மகிழ்ச்சியுடையவன்.
09. சாரணன் சிக்கனமானவன்.
10. சாரணன் சிந்தனை, சொல், செயல், தூய்மையானவன்.

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

# கல்லூரியில் சாரணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.

— I.A. றகும் —

எமது கல்லூரி வித்தியாலயமாக இருந்த காலத்தில் சாரணியம் பலமுறை முளைத்தும் அங்குரித்து மறைந்தது என்றாலும், 1978 - 1983 காலப் பகுதியில் எமது வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஜனாபா ஏ எம் ஆப்தீன் ஆசிரியை அவர்களால் குருளைச் சாரணியமாக இது பிரசவித்தது. இதில் 35 குருளைகள் அங்கம் வகித்தனர். ஜனாப் ஐ ஏ றகும், செல்வி பரீதா இஸ்மாயீல் ஆகிய ஆசிரியர்கள் இவருக்கு உதவியாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1985 - 1987 இல் பிரதம கல்வி அதிகாரியாக இருந்த ஜனாப் எம் ஐ எம் சரீப் அவர்களின் ஊக்குதலினால் சாரணியம் மாவட்டத்தில் புத்துயிர் பெற்றது. இக்காலத்தில் எமது கல்லூரியிலும் கனிட்ட சாரணர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு /009/85/6 ம் இலக்கப்பதிவிலக்கத்தையும் பெற்றது. குருளைச் சாரணர் தலைவராக ஜனாப்கள், ஐ ஏ றகும், எம் ஐ ஏ பாறூக், ஏ பீ எம் றபீக் ஆசிரியர்கள் பணியாற்றினர். இதில் 120 கனிட்ட சாரணர்கள் அங்கம் வகித்தனர். மாவட்ட சாரணிய சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட சகல விழாக்களிலும் வைபவங்களிலும் இப்பிரிவு கலந்துகொண்டது. அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரி மைதானத்தில் சாரணர் பாசறையிலும் பங்குபற்றியது. இவ்வாண்டுகளில் மாவட்டத்தில் கூடுதலான சாரணர்களைக் கொண்ட பாடசாலை என்ற பெருமையையும் இக்கல்லூரி பெற்றுக்கொண்டது.

1988 - 1989 இல் கனிட்ட சாரணர்கள் 25 பேரும் சிரேஷ்ட சாரணர்கள் 35 பேரும் அங்கம் வகித்தனர். சிரேஷ்ட சாரண தலைவராக ஜனாப் ஐ ஏ றகும் ஆசிரியர் அவர்கள் செயலாற்றினார். 1989 ல் நடைபெற்ற 'சார்க்' நாடுகளின் ஜம்போறியிலும் கலந்து அங்கு நடைபெற்ற பல நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி பாராட்டுக்களையும், சான்றிதழ்களையும் பெற்றனர். மாவட்டத்தில் நடைபெற்ற சகல சாரணர் விழாக்களிலும் பங்குகொண்டனர். பல்வகைச் சிரமதானங்களிலும் சாரணர் சேவை புரிந்தது.

இதில் 35 சாரணர்கள் 2 ஆம் வகுப்புத் தகைமையையும், 15 சாரணர்கள் 1 ஆம் வகுப்புத் தகைமையையும் பெற்றனர். 1990 - 1991 இல் 80 சாரணர்கள் இருந்தனர். இக்கால கல்லூரியின் மாவட்ட குழுச் சாரணர் தலைவராக ஐ ஏ றகும் ஆசிரியர் அவர்களும், உப சாரணர் குழுத் தலைவர்களாக எம் எம் எம் ஜுபைர், எம் சீ எம் காஸீம் ஆசிரியர்களும் பங்களிப்புச் செய்தமை உதவியாக இருந்தது.

25 சாரணர் 2 ஆம் வகுப்புத் தகைமையும், 15 பேர் 1ஆம் வகுப்புத் தகைமையும், 10 பேர் ஜனாதிபதி பதக்கம் பெறும் தகைமையுடனும் இருந்தனர். 1991 இல் ஐ எல் ஜலீல், எச் எம் எம் மௌசூராக், எம் ஐ எம் நளீர் ஆகிய மூன்று சாரணர்கள் ஜனாதிபதி பதக்கத்தைப் பெற்று கல்லூரியின் வரலாற்றுக் க[illegible] முதலெழுத்துக்களைப் பதித்துக்கொண்டனர். மாவட்டத்தில் நடைபெற்ற விழாக்களிலும் கண்டி செங் அந்தனிஸ் கல்லூரியில் நடைபெற்ற ஜம்போறியிலும் கலந்து பாராட்டுக்களைப் பெற்றனர்.

29 02 92 இல் ரோவர் ஸ்கௌட் பேடன் பவல் அவர்களின் (135) மாவட்டத்தின் நினைவு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட எம் ஏ அப்துல் மஜீட் எம்.பி., நெசவுக் கைத்தொழில் அமைச்சர் அவர்களால் ஜனாதிபதி பதக்கம் அணிவிக்கப்படுவது இக்கல்லூரி சாரண வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

மாவட்ட சாரணர் குழுத் தலைவர்,
முஸ்லிம் மத்திய கல்லூரி,
சம்மாந்துறை.

AKKARAIPATTU-KALMUNAI
DISTRICT

PUBLIC LIBRARY
SAMMANTHURAI
04-3-1992

நன்றிக்குரியவர்கள்...

சாரணம், ஐ. எல். ஜமீல் (12 வருடங்கள்)

ஜனாதிபதி சாரணர் விருதைப் (பதக்கம்) பெற்ற எங்களுக்கும் பேடன் பவல் அவர்கள் ஆரம்பித்துவைத்த நற்பணியை எமது சாரணர் சிறார்களுக்கும் ஊட்டி நற்பிரஜைகளாக சமூகத்தில் கௌரவத்துடன் மிளிர்வதற்கு வித்திட்ட அறிவுச் சுடர்களுக்கும் ஆசான்களுக்கும் பெருமை பாராட்டுவதில் கல்லூரியின் சாரணர்கள் குழு பேருவகை கொள்கின்றது.

இக்கலாசாலையில் 1978 ல் பிரசவித்த குருளைச் சாரணியம் 1985ல் தவழ ஆரம்பித்தது. 1988 ல் நடைபயின்ற அது 1991 ல் கௌரவமிக்க வரிசையாக ஜனாதிபதி பதக்கம் பெற்று நிற்கின்றது.

சமயத்துக்கும் நாட்டுக்கும், பிறருக்கும் கடமையும் உதவியும் செய்யும் நற்பண்புகளை எங்களது பிஞ்சு உள்ளங்களில் ஊட்டி கௌரவமிக்க நற்பிரஜைகளாக உருவெடுக்க தங்களை அர்ப்பணித்து நிற்கும் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

காடுகளிலும் மேடுகளிலும், இரவிலும் பகலிலும், பனியிலும் மழையிலும், மலையிலும் மடுவிலும் சகிப்புத் தன்மையைக் காட்டி ஆடலும் பாடலும் உவந்த மகிழ்வில் ஊட்டி நல்லதும் கெட்டதும் பிரித்தறிய ஊட்டிவைத்த பெருந்தகைகளைப் போற்றுகின்றோம்.

நாங்கள் புகழாரம் சூட்டும் வரிசையிலே.... எங்கள் கல்லூரியின் மாவட்ட சாரணர் குழுத் தலைவர் கௌரவ ஐ ஏ றசூல் ஆசிரியர் அவர்களையும், ஜனாப் எஸ் எம் ஏ ஸலாம் அதிபர் அவர்களையும், முன்னைநாள் அதிபர் ஜனாப் எம் ஏ பாரூக் அவர்களையும் தங்களை முழுமையாக சாரணியத்துக்காக அர்ப்பணித்து பயிற்சிகளைத் தந்த கௌரவ எம் ஐ எம் முஸ்தபா (எல்.சீ) ஆசிரியர் அவர்களையும் கௌரவ எம் ஏ சரீப்தீன் (எல்.சீ) ஆசிரியர் அவர்களையும் இடையிடையே எங்கள் பாசறையில் கலந்து நற்பண்புகளை எங்களிடம் ஊட்டிய ஏனைய ஆசிரியர்களான எம் எச் எம் மன்சூர், எம் எச் எம் நவாஸ், ஐ எல் ஏ மஜீட், ஏ அலி, ஏ எல் எம் காஸிம், என் எல் சித்தீக் ஆகியோருக்கும், ஜனாப் எம் ஏ எம் மீராசாஹிப் (எல்.சீ) பி ஆர் ஓ அவர்கட்கும் தற்போதைய மாவட்ட சாரணர் ஆணையாளர் அல் ஹாஜ் எம் பீ எச் முகம்மது (பிரதம கல்வி அதிகாரி) அவர்கட்கும் உயர் பதக்கங்களைப் பெற எங்களுக்கும் எங்கள் மாவட்டத்துக்கும் வழிகாட்டிய இலங்கை சாரணிய சங்கத்தின் தமிழ்ப்பிரிவு பயிற்சிக்குப் பொறுப்பாளராகவிருக்கின்ற கௌரவ ரீ. தர்மலிங்கம் (கல்வி அதிகாரி பண்டாரவளை) அவர்கட்கும், வேண்டிய போது முதலுதவிப் பயிற்சிகளை வழங்கிய முதலுதவி மாவட்ட ஆணையாளர் ஜனாப், ஏ எல் அலியார் அதிபர் அவர்களையும், எமது கல்லூரியின் சாரணியத்துக்கு உதவியாக இருக்கின்ற எம் எம் ஜஃபர், எம் சீ எம் காஸிம் ஆசிரியர்கட்கும், ஒத்துழைத்த ஏனைய ஆசிரியர்கட்கும் எங்கள் சாரணர்களின் மேலான நன்றியைப் பாராட்டுகின்றோம். இவர்களின் சேவை மேலும் மிளிர இறைவன் உதவிபுரிவானாக ....

சாரணர் குழுத் தலைவர்,
முஸ்லிம் மத்திய கல்லூரி,
சம்மாந்துறை.

# குழூர்சாரணத் தலைவரும்
# ஜனாதிபதி பதக்கம் பெற்ற சாரணர்களும்



I.A. றசூல்

குழுச்சாரணத் தலைவர்



செல்வன், ஐ. எல் ஜலீல்,
ஜீ பி எஸ் அருகாமை,
அம்பாறை வீதி,
சம்மாந்துறை.



செல்வன், எச் எம் எம் ஹைஉறாக்,
27, அம்பாறை வீதி,
சம்மாந்துறை.



செல்வன், எம் ரீ எம் நஸார்,
சாலி றோட்,
சம்மாந்துறை.

ஓடர் நகைகள் சிறந்தமுறையில் குறித்தகாலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

உங்கள் இதயங்கள்...
தங்க, வைர நகைகளைப்பற்றி
நினைக்கும்போது
நீங்களும் எங்களை மறக்கவேண்டாம்.





நம்பி வாருங்கள் !

நாணயம் எங்கள் முதல் குறிக்கோள் !

ஏசியா கோல்ட் ஹவுஸ்
28, மத்திய வீதி, சம்மாந்துறை
Asiaa Gold House

ALRAZI PHOTOCOPIER